# 9 –ஆம் வகுப்பு–தமிழ் இயல் தேர்வு–5

**I சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:** **7×1=7**

1. என்னண்ணே ! நீங்கள் சொல்வதை நம்ப முடியவில்லை !
   அ) வினாத்தொடர் ஆ) உணர்ச்சி தொடர் இ) கட்டளைத்தொடர்
2. பூவாது காய்க்கும், மலர்க்கை – அடிக்கோடிட்ட சொற்களுக்கு இலக்கணக்குறிப்பு தருக.
   அ) வினையச்சம், உவமை ஆ) எதிர்மறைப்பெயரெச்சம், உருவகம் இ) எதிர்மறை பெயரெச்சம், உவமைத்தொகை
3. குறுந்தொகை _________ இலக்கியம்.
   அ) அற இலக்கியம் ஆ) சங்கஇலக்கியம் இ) காப்பியஇலக்கியம்
4. 1930 இல் அவ்வை இல்லம் நிறுவியவர் _________ ?
   அ) பண்டிதரமாபாய் ஆ) மூவலுர் இராமாமிர்தம் இ) முத்துலெட்சுமி

**பின்வரும் வினாக்களுக்கு பாடலை படித்து விடையளிக்க.**

கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம் அந்நிலத்தில்
புல் விளைந் திடலாம் நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை
கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி அங்கே
நல்லறிவு உடைய மக்கள் விளைவது நவிலவோ நான் !

5. இப்பாடலின் ஆசிரியர் யார் ?
6. கல்வி இல்லாத பெண்கள் எதனை போன்றவர்கள் ?
7. நவிலல்– பொருள் தருக.

**II எவையேனும் மூன்றனுக்கு மட்டும் குறுகிய விடைதருக.** **3×2=6**

8. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளை குறிப்பிடுக.
9. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது ?
10. பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழிகள் இரண்டினை கூறுக.
11. சிறுபஞ்சமூலம் குறிப்பு வரைக.
12. பாவேந்தர் பாரதிதாசனின் படைப்புகள் யாவை ?

**III எவையேனும் மூன்றனுக்கு விடைதருக.** **3×2=6**

13. இடைச்சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க.
    1. அலுவலர் வந்தார்; அனைவரும் பதற்றம் அடைந்தனர்
    2. கவலையற்ற எதிர்காலம் ; கல்வியே நிகழ்காலம்
14. பொருள்தருக கான், நசை.
15. கலைச்சொல் தருக– Saline Soil, Volunteer.
16. பகுபத உறுப்பிலக்கணம் தருக– விளைவது.
17. கல்வி குறித்த தொடர்கள் இரண்டினை எழுதுக.

**IV எவையேனும் நான்கனுக்குமட்டும் விடையளிக்க.** **4×3=12**

18. மூவலூர் இராமாமிர்தம் – குறிப்பு வரைக.
19. நீலம்பிகை அம்மையாரது தமிழ்ப்பணியின் சிறப்பைக் குறித்து எழுதுக.
20. பெண்மையைப் போற்றும் கவிதை அடிகளை எழுதுக.

21. புகழுக்குரிய நூலகங்கள் நான்கினை கூறுக.
22. பூவாது – எனத்தொடங்கும் சிறுபஞ்சமூல பாடலை எழுதுக.

**V எவையேனும் இரண்டினுக்கு சுருக்கமான விடை தருக. 2×3=6**

23. விளம்பரத்தை செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க.

புத்தகம் படிப்போம்! புதியன அறிவோம்!

**புத்தக திருவிழா**

நாள்– செப்டம்பர் 19 முதல் 28 வரை
இடம்– சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்
நேரம்– காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

[முதல் நாள் காலை 9 மணிக்கு தமிழக கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார்]

நாள் தோறும் மாலை 6மணிக்கு புதிய புத்தகங்கள் வெளிவரும், சிறப்பு பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்.

அனைவரும் வாரிர்! அறிவுத்திறம் பெறுவீர்!

24. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகாலன்னும்
துன்பத்துள் துன்பங் கெடின் – அலகிட்டு வாய்ப்பாடு தருக.
25. சொற்பொருள் பின்வருநிலையணி – சான்றுடன் விளக்குக.

**VI எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விரிவான விடையளி. 2×6=12**

26. குடும்ப விளக்கில் தலைவி பேச்சில் வெளிப்படும பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.
27. நூலகம் குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படும கருத்துக்களை எழுதுக.
28. உங்கள் தெருவில் பழுதடைந்துள்ள மின்விளக்குகளை சரிசெய்து தருமாறு மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

**ஆ.லோகநாதன்**

**அரசு மேனிலைப்பள்ளி**

**வடஇலுப்பை**

Kindly send me your key answers to our email id - padasalai.net@gamil.com